## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.19/2023

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 16 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. V. பாண்டியன், Bench Clerk (Gr-III) - I/C அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 16.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சாமிநாதன் (PW-1) | வயது | : | 78/2025 |
| க/த பெயர் | : | திரு. தங்கவேல் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | | மன்னார்குடி |

**1ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள விபரங்கள் அனைத்தும் நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் நானும் ஒரு பாகஸ்தர் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாகஸ்தரர் என்ற முறையில் பாகப்பிரிவினை கோரி வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனது தகப்பனார் தங்கவேலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது தகப்பனார் தங்கவேலுக்கு தாவா சொத்தினை தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் இல்லை.

2. தாவா சொத்து எனக்கு கிடைத்ததாக கட்சி செய்வதால் தாவா சொத்தானது எனது பெயரில் உள்ள ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தகப்பனார் தங்கவேலுக்கு நானும், மாரிமுத்து, நாகராஜன், தர்மாம்பாள் ஆகியோர் வாரிசுகளாக உள்ளோம். தர்மாம்பாளை பற்றி இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தர்மாம்பாளை தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இறந்து விட்டார். தர்மாம்பாள் இறந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எப்போது இறந்தார் என்றால் 40, 50 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார்.

3. எனது அப்பா தங்கவேலுவின் வாரிசுகள் தற்போது உயிருடன் உள்ளனரா என்றால் நான் மட்டும் தான் உயிருடன் உள்ளேன். மற்றவர்கள் இறந்துவிட்டார்கள். மருதம்பாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அதுபோல எனது சகோரரான மாரிமுத்துவிற்கு சேகர் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். சகோதரி மருதம்பாளுக்கு

மணிசேகரன், மாதவன் ஆகியோர் வாரிசுகளாக உள்ளனார் என்றால் இல்லை சேகர் என்ற ஒரு பையன் இருக்கும் விபரம் மட்டும் தெரியும்.

4. இந்த வழக்கில் 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகளான துர்காதேவி, கற்பகம் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.67/1988 வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எனது சகோதரர் மாரிமுத்து என் மனைவி தனத்திற்கு எதிராக இந்நீதிமன்றத்தில் சொத்து வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 29.11.1993 ல் தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் பாகப்பிரிவினை தான் கோர முடியும், விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்று தள்ளுபடி செய்து விட்டார்கள் என்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கு எதிராக மாரிமுத்து மேல்முறையீடு செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாகராஜனும் இந்த 1 ம் பிரதிவாதியும் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

5. எனது அப்பா தங்கவேலுக்கு சொந்தமான இதர சொத்துக்களை பொறுத்து நாகராஜன் என்பவர் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.13/2013 வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் ஒரு உரிமையாளர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

6. 2022 ல் நான் 2 வது தரப்பினாராகவும், பாலாஜி மனைவி சுபா தரப்பினராக இருந்து ஒரு கிரய ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். அந்த சொத்து எனது தாத்தா ராமசாமியின் சொத்து.

**பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.17 10:56:34 +0530

District Munsif

Mannargudi.